# தூர தேசத்து நண்பர்கள்

தொடர்பறுந்து போன என் தூர தேசத்து
பிரம்மச்சாரி நண்பர்கள்
இப்போது என்ன செய்து கொண்டிருப்பார்கள்?
அழிந்து போன டைனோசரின் பாதச்சுவடு போல
எனது பழைய டைரியில் கிடைத்த அவர்களின்
தொலைபேசி எண்கள் கலைந்து கிடந்தன.
மிருகக்காட்சிசாலையின் மயக்கமூட்டப்பட்ட புலி
கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிவதுபோல
நினைவுக்கு வந்தன என் பழைய நினைவுகள்.
குளிரில் குமுறிப் புலம்பும் கடலோரத்து மதுவிடுதியில்
அவர்கள் இப்போது என்ன செய்து கொண்டிருப்பார்கள்?
பனியில் உறைந்து போன கால்வாயின்மீது
நீந்த நீரின்றி வாத்துகள் நடப்பதுபோல் என் நினவுகள்
நீந்த முடியாமல் தட்டுத் தடுமாறி நடக்கின்றன.
அவர்களின் நாவின் விநோத உச்சரிப்பில் என் பெயர்
காற்றில் திறந்து வைத்த புத்தகம்போல் படபடக்கிறது.
பிளட்பாரம் கிடைக்காமல்
ரயில் நிலையத்துக்கு வெளியே நிற்கும் ரயில்களைப்
போல்
மின்னஞ்சல்கள் பகிரப்படாமல்
சூனிய வெளியில் சுழல்கின்றன.
இரவு உணவுக்காக அவர்கள் இப்போது
என்ன சமைத்துக் கொண்டிருப்பார்கள்?
நாங்கள் ஒருநாள் சந்தித்துக் கொள்ளப் போகிறோம்
என்கிற நம்பிக்கையில்
அன்பைச் சுமந்து கொண்டிருக்கிறோம்.

அது உண்மையாகத்தான் இருக்க வேண்டும்
ஆனால் என்னால் நம்ப முடியவில்ல
நாங்கள் சந்திக்கப்போகிறோம் என்பதை.
ஏனெனில் அவர்கள் இப்போது
தொடர்பறுந்து போன தூர தேசத்து நண்பர்கள்.
--- 30 ஆகஸ்டு 2020

